# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **EA.01/2022 in EP.95/2021** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **வா.சா- 03 ( PW- 03 )** |
| **பெயர்** | :- | **சரஸ்வதி** |
| **தேதி** | :- | **14-10-2025** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

என் தம்பி பரமசிவத்தின் மனைவிதான் ஜெயா என்றால் சரிதான். 2011 -ஆம் ஆண்டு ஜெயா பெயரில் வாங்கப்பட்ட சொத்துதான் தீர்ப்பாணை சொத்து என்றால் சரிதான். ஜெயா மரவள்ளி கிழங்கு ஸ்டார்ச் வாங்கி விற்கும் தொழில் செய்தார் என்றால் சரிதான். என் தம்பியும் ஜெயாவும் சேர்ந்து அந்த தொழில் செய்தார்கள் என்றால் கொரோனா காலத்திற்குமுன் செய்தார்கள். தொழிலுக்காக இருவரும் ஸ்டார்ச்சை வங்கியில் அடகு வைத்து கடன் வாங்கினார்கள் என்றால் சரிதான். ஸ்டார்ச்சை அடகு வைக்காமல் வேறு மாவை அடகு வைத்துவிட்டார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. அவ்வாறு ஏமாற்றியதற்காக பரமசிவம், ஜெயா ஆகிய இருவர்மீது குற்றவழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது. ஜெயா இறந்துவிட்டார்.

ஜெயா பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்து அவருடைய சுய சம்பாத்திய சொத்து என்றால் சரியல்ல. என் தகப்பனார் பணம் கொடுத்து மருமகள் பெயரில் கிரையம் வாங்கினார். நான் பொய் சொல்கிறேன்

என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை ஏமாற்ற பொய்யாக மனுதாக்கல் செய்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.